1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே நாட்டரம்பள்ளி பேரூராட்சி ஆய்வுத் தொகையைக் கட்டுவதற்கு நிதிவசதி இல்லை என்று கூறிவிட்டது. எனினும், பேரூராட்சியின் சார்பில் வாரியம் ஆய்வுப் பணிகளை ஏற்று நடத்தவும் இப்பணிகளுக்கு ஆகும் செலவுத் தொகையை திட்ட மதிப்பீட்டில் இணைத்து பின்பு அரசு ஒப்புதலுடன் இத்திட்டம் நிறைவேறும் பொழுது திருப்பிச் செலுத்தவும் பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைத்தால் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். பொதுவாக ஆய்வுப் பணம் முன்னதாகத் தரவேண்டும். திட்டத்திற்கான பணத்தைப் பின்னதாகத் தரவேண்டும். எனவே ஆய்வுத் தொகையையும் திட்டத் தொகையையும் பின்னதாகத் தருகிறோம் என்று தீர்மானம் நிறைவேற்றி பேரூராட்சி அரசுக்கு அனுப்பி வைத்தால் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே நாட்டரம்பள்ளிப் பேரூராட்சிக்கு நிதிவசதி குறைவாக இருப்பதால் அரசு இதற்காக சலுகை அளித்து இந்தத் திட்டத்தை செயலபடுத்த ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :— தலைவரவர்களே அதற்காகத்தான் சொன்னேன். ஆய்வுத் தொகையை முன்னதாகக் கட்டாமல் ஆய்வுத் தொகையையும் திட்டத் தொகையையும் சேர்த்துப பின்னதாகக் கட்டுகிறோம் என்று தீர்மானம் நிறைவேற்றினால் அந்தத் திட்டம் குறித்து ஆய்வு செய்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே அப்படித் தீர்மானம் நிறைவேற்றி அனுப்புவதறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றிய ஆய்வு.

* வினா எண் 113 —திரு எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிபபாரா:

(அ) நீர்ப்பாசனத் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க மாநில மட்டத்தில் உயர்மட்ட அமைபபுக்களை ஏற்படுத்த வேண்டும் என்று மாநில அரசை மத்திய அரசு வற்புறுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இதுபற்றிய விவர அறிக்கை சட்டமன்றப் பேரவையின்முன் வைக்கப்பெற்றது.

[356-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது]

[முற்பகல் 9-30]

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே. 30 கோடிக்கு மேற்பட்ட செலவு மதிப்புடைய பாசனத் திட்டத்திற்கும், 30 கோடிக்குக்கீழ் மதிப்புள்ள இரு பெரிய பாசனத் திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் அரசாங்க அதிகாரிகளை இந்த குழுவின்கீழ் போட்டிருக்கிறார்கள். இந்தக் கமிட்டியிலும், சிறு பாசனத் திட்டங்களை ஒருங்கிணைக்கவும் கண்காணிக்கவும். மறு ஆய்வு செய்யவும் ஒருங்கிணைப்புக் குழு என்ற பெயரில் போடப்படும் கமிட்டியிலும், வங்கிகளுக்குக் கூட பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெளியிலேயும் ஒவ்வொரு துறையிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதிகளைப் போட்டு சட்டமேலவை பேரவை உறுப்பினர்களையும் போட்டு இக் குழுக்களை நடத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய ஆணைக்கிணங்க இது குறித்து ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு பாசனத் துறையைப் பொறுத்த வரையில் ஏற்கனவே ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு அதிலே சட்டமன்ற மேலவை பேரவை உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அவைகளின் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, வேறு ஆலோசனைக் குழு அமைக்கும் திட்டம் அரசினுடைய ஆய்வில் இல்லை.

செடிப் பண்ணைகள்.

* வினா எண் 114—திரு சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் எங்கெங்கு செடிப் பண்ணைகள் இருக்கிறது?

(ஆ) அதன் மூலம் ஏதாவது பயன் ஏற்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

[357-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.